[1st November 1962

### *மாஜி ராணுவத்தினர் (நில வினியோகம்)*

* *1070-எக்ஸ்எக்ஸ் கேள்வி.*—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1962-ல் நமது மாநிலத்தில் இதுவரையில் மாஜி ராணுவத்தினர் எத்தனை பேர்கள் நிலம் கேட்டு விண்ணப்பம் அனுப்பினர்கள்?

(இ) எத்தனை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிலம் வழங்கப்பட்டது?

(உ) எத்தனை ஏக்கர் நிலம் வினியோகம் செய்யப்பட்டிருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: (அ) 1962-ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ம் தேதிவரை 1,443 விண்ணப்பங்கள் பெறப்பெற்றன.

(இ) அவற்றுள் 317 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் பட்டன.

(உ) 743·30 ஏக்கர் நிலங்கள் வழங்கப்பட்டன.

### *Whole-Sale Market for Tiruchi*

* **1070-YY** *Q.*—SRI **M. KALYANASUNDARAM**: **Will the Hon.** the Minister for Finance be pleased to state the present stage of the proposal to shift the Sub-Jail, Tiruchirappalli, to the precincts of the Central Jail and to make the site available for locating a whole-sale market for Tiruchi?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: The proposal is under the consideration of the Government.

### அரசாங்க பஸ்கள்

* *1017-இஸட்இஸட் கேள்வி.*—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க பஸ்கள் டெல்லி சர்க்காருக்கு விற்கப்பட்டனவா?

(இ) ஆமெனின் எத்தனை பஸ்கள், எவ்வளவு தொகைக்கு விற்கப்பட்டன.

கனம் திரு ஆர். வெங்கட்டராமன்: (அ) ஆம், ஐயா.

(இ) நூறு பஸ்கள், கிரயம் ரூ. 15·25 லட்சத்திற்கு **Delhi Transport undertaking**-கிற்கு விற்கப்பட்டன.

திரு. கே. டி. கோசல்ராம்: இங்கிருந்து டெல்லிக்கு இந்த பஸ்களை கொடுப்பதனால் இந்த அரசாங்கத்திற்கு இலாபம் உண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: அதை வெளியிலே சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன்.